**தி.ஐ. மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, அம்பத்தூர்**

அரையாண்டுத்தேர்வு –2017

மதிப்பெண் :60

பதிவு எண்: …………… நேரம் : 1:30மணி

பகுதி_அ

**அ. பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடையளி** **( 5x1=5)**

அது ஒரு கடற்கரைக் கிராமம். அங்கு அடிக்கடிப் புயல் வீசும். கடல்நீர் ஊருக்குள் புகுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தும். எனவே ஊர் மக்கள் கடற்கரையை ஒட்டி நீண்ட தடுப்புச் சுவரைக் கட்டி வைத்தனர்.

தடுப்புச் சுவரை ஒட்டி நீண்ட பாதை இருந்தது. குமரன் இந்தப் பாதை வழியாகத்தான் தினமும் பள்ளிக்குச் செல்வான். அவன் பள்ளி மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது.

அது குளிர்காலம். சீக்கிரமே இருட்டி விட்டது. பலத்த காற்றும் வீசியது. எந்த நேரமும் புயல் வரும் போலத் தோன்றியது. பள்ளிக்கூடம் முடிந்து குமரன் வேக வேகமாக வீடு திரும்பிக் கொண்டு இருந்தான்.

அப்போது பாதையில் நீர் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். ‘எங்கிருந்து நீர் வருகிறது?’ சுற்றும் முற்றும் பார்த்தான். தடுப்புச் சுவரிலிருந்து நீர் கசிவதைக் கண்டுபிடித்தான்.

‘ஐயோ! சுவரில் சிறுதுளை இருக்கிறதே! இது பெரிதாகிவிட்டால் சுவர் உடைந்து விடுமே! வெள்ளம் புகுந்து கிராமமே அழிந்துவிடுமே! என்ன செய்யலாம்?’ என்று யோசித்தான்.

துளையை அடைக்கக் கற்கள் கிடைக்குமா என்று தேடினான். அங்கு எதுவும் கிடைக்கவில்லை. சட்டென்று தன் கையை வைத்துத் துளையை அடைத்தான்.

வினாக்களுக்கு விடையளி:

1.தடுப்புச் சுவரை ஒட்டி என்ன இருந்தது?

______________________________

______________________________

______________________________

2.குமரன் ஏன் வேகவேகமாக வீடு திரும்பினான்?

______________________________

______________________________

______________________________

3. சுவரில் என்ன இருந்தது?

______________________________

______________________________

______________________________

4.எங்கிருந்து நீர் கசிந்தது?

5.குமரன் எதனை வைத்துத் துளையை அடைத்தான்?

**பகுதி- ஆ**

**அ. ரோபோ தன்னைப் பற்றித் தானே பேசினால். . . . . என்ன பேசியிருக்கும் என எழுதுக.(5 வரிகளுக்குக் குறையாமல்)** **(5 )**

**பகுதி-இ**

**அ. பின்வரும் பழமொழிகளை நிறைவு செய்க:** **(3X1=3)**

1. காற்றுள்ள போதே ______________________________
2. நோயற்ற வாழ்வே ______________________________
3. மின்னுவதெல்லாம் ______________________________

**ஆ. இரு பொருளைத் தரும் ஒரு சொல்லை எடுத்து எழுதுக:** **(3x1=3 )**

1. ஆடை நெய்ய உதவுவது
   திருக்குறள் உலகம் போற்றும் } __________
2. பாட்டுக்கு நீயும்
   புல்லை மேயும்__________ } __________
3. மலர்கள் பல சேர்ந்தால் }

மாலை, நூல்
ஆடு

சூரியன் மறையும் பொழுது ________

**இ .ஆங்கிலச் சொல்லிற்கு தமிழ்ச் சொற்களை எழுதுக.** (2x1=2)

1. agriculture _ ____________________
2. speaker _ ____________________

**ஈ. பின்வரும் தொடர்களைத் திருத்தி எழுதுக :** (3x1=3)

1. மக்கள் மந்தை மந்தையாய் சென்றனர்.

____________________________________________________________

2. அமுதா, பூந்தோப்பில் பூக்களைப் பறித்தாள்.

____________________________________________________________

3. தென்னந்தோட்டத்தில் தேங்காய்கள் காய்த்தன.

____________________________________________________________

**உ.சொற்றொடர்களைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க:** (3x1=3)

(வருகவருக,சாரைசாரையாய், மூட்டைமூட்டையாய்,கொத்துக்கொத்தாய்)

1. ரோபோ, விருந்தினர்களை ____________ __________ என வரவேற்றது.

2அவரை ________________ __________________ காய்க்கும்.

3.எறும்புகள் ________________ _______________ செல்லும்.

**ஊ. மயங்கொலிப் பிழைகளைக் களைக :** (2x1=2)

1.சோலைகளில் பல வன்னமலர்கள் பூத்துக் குலுங்கின.

____________________________________________________________

2. காய்ந்த விதைக்குப் பழுதிள்ளை.

____________________________________________________________

**பகுதி – ஈ**

**அ. பொருள் தருக:** (3x1=3)

1. சித்திரம் _ ______________________________
2. ஆநிரை _ ______________________________
3. தெங்கு _ ______________________________

**ஆ. பிரித்து எழுதுக:** (3x1=3)

1. கருத்தரங்கு _ ______________________________
2. வெற்றிலை _ ______________________________
3. கணினியின்றி _ ______________________________

**இ. சேர்த்து எழுதுக:** (3x1=3)

1. நெல்+கதிர் _ ______________________________

2. நலம் + அறிய _ ______________________________

3.முசுண்டை+ கொடி _ ______________________________

**ஈ. எதிர்ச்சொல் தருக:** (3x1=3)

1. அருகே x ________________
2. பின்புறம் x ________________
3. வெற்றி x ________________

**உ. கோடிட்ட இடங்களை நிரப்புக:** (3x1=3)

1. நெகிழியால் செய்யப்பட்டபொருளை எரிக்கும்போது வெளியாகும் நச்சுப்புகையின் பெயர் ________________
2. நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்களில் ஒன்று ________________
3. மூதுரையின் ஆசிரியர் ______________________

**ஊ. பின்வரும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:** (2x2=4)

1.கூட்டம்கூட்டமாக

______________________________________________________________________

______________________________________________________________________

2. மகிழ்ச்சியாக

______________________________________________________________________

**எ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக: (3x2=6)**

1. தோப்பு, தோட்டம் வேறுபாடு யாது?

2. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய முதல் கடமை என்ன?

3.உரமிடுவதனைக் குறித்து வள்ளுவர் கூறியது யாது?

**ஏ. பின்வரும் வினாவிற்கு (ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக. 1x5=5**

1. பாவேந்தர் தன் கவிதையில் இயற்கையை எவ்வாறு வருணிக்கிறார்?

பகுதி_உ

**ஐ. :அடிமாறாமல் எழுதுக:** **(4)**

" நல்லாரைக் காண்பதுவும் "எனத் தொடங்கும் மூதுரைப் பாடலை எழுதுக:

****************